# நிலவுக்குள் அவ்வை! ஒரு கவளம் சோறு! மூன்று பிடி மண்!

ராசன் றஜீன்குமார்

**கலைச்செல்வனின் ஸ்தூல மறதியை மறக்கடிக்க முயன்ற ஒரு நாளில் அருந்ததியின் இயக்கத்தில் ஷோபாசக்தியின் பிரதியாக்கப் பகர்வின் தொடர்ச்சியாக இந்தப் பகிர்வுப் பிரதியாக்கம்.**

ஜகவாரியாக குழந்தைகளின் - குழந்தைமையின் அழிப்பின் மூலம் கட்டப்படும் கலாச்சாரக் கோவில்களும் - யுத்த வெற்றிகளும் தீவிர விசாரணை செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

"நிலவுக்குள் அவ்வையார் முற்றம் கூட்டுகிறா" என்ற நிலாக்கதையோடு ஆரம்பிக்கிற சோறூட்டல் மூலம் அவர்களின் புதைகுழிகளின் மீதான மூன்று பிடி மண்ணை அப்போதே போட்டு விடுகிறோம். இன்னொரு வளத்தால் - பிள்ளைக் கறி கொடுத்த சிறுத்தொண்டன் - தன் பிள்ளையின் பிணத்தை மறைத்தபடி அப்பருக்கு விருந்து கொடுத்த அப்பூதியடிகள் - போன்றோரின் குருட்டு விசுவாச ஆத்மீகத் தேடலை கொச்சைப்படுத்துகின்ற - புராணக் கதையாடல்கள் மூலமும் - அச்சில் வார்த்த ரப்பர் பாலாய் வடிவம் பெறாத வடிவங்களாய் தறுக்கணித்துப் போய் குழந்தை முகங்களும் கோர மனங்களுமாய் பாடம் போட்டு, அதே வழியில் வந்த வளர்ந்தோர் சமூகம் தம் மரணத்தின் பின்னான வெற்றிடங்களை நிரப்புவதில் "தாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்" என்று குரூரத் திருப்தி கொள்கிறது.

இந்த நூற்றாண்டின் நவீன சமூகக் கட்டமைப்பில் குழந்தைகளைக் கையாளல் ஒன்றும் அனிச்சை நிகழ்வல்ல.

நவீன ஆயுதத் தொழில்நுட்பத்தில் குழந்தைகளும் கையாளக்கூடிய வடிவமைப்புகளைச் செய்து நீண்ட கால வாடிக்கையாளர்களாய் யுத்தமுனைகளுக்கு அனுப்பிவிடுகிற மேற்கு நாடுகள் ஒரு புறம் - வரைபடங்களில் ஒரு தடிக் குச்சியினால் படை நகர்த்தி தங்கள் பட்டயங்களை உயர்த்திக் கொள்ளும் உள்ளூர்த் தளபதிகள் ஒரு புறம் - மைதானத்தின் வெளியில் இருந்து ரசிக்கும் பற்றாளர்கள் ஒரு புறம்...!

யுத்த தேசத்தில் குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதாக எந்த நிறுவனமயப் படுத்தப்பட்ட அமைப்புகளும் யுத்தப் பிரதேசங்களில் உள்ள குழந்தைகளை மீட்டெடுத்து கந்தகப் புகையற்ற இடத்தில் சுவாசிக்க விடுகின்ற எந்த ஒரு முயற்சியையும் செய்ததாக இன்று வரையிலான சரித்திரங்கள் கூறவில்லை.

இதனால்தான் யுத்தம் அநாதைக் குழந்தைகளை உருவாக்குகிறது. அநாதைக் குழந்தைகள் யுத்தத்தை நீண்ட காலம் தக்க வைப்பார்கள் என்ற சுழற்சிப் பொறிமுறை நிலைத்திருக்கிறது.

குறிப்பாக, சமூகத்தில் குடும்ப வாழ்முறை - பாடசாலை உறவு - படிப்பு முறை போன்றனவே பாசிசத்தின் ஊற்றுக் கண்கள்.

காதலும் - காமமுமே வன்முறை சார்ந்ததான தமிழ்ச் சமூகத்தில், யுத்தமும் மரணங்களும் இயல்பு வாழ்வாக வரித்துக் கொள்கின்ற இலகுத் தன்மை விதியாக இறுகிப்போய் உள்ளது.

வளர்ந்தோர் தாங்கள் பயிர் நடும் வேலியாக உள்ளதில் பரவசமடைகிறார்கள்

குழந்தைகளிடம் பொய்களை மாத்திரமல்ல நாங்கள் உண்மைகளென வரித்துக்கொண்டவைகளையும் கூறவேண்டாம். அவை அவர்களுக் குரியவை அல்ல.

என் இனிய விதிவிலக்குகளே! - ஒத்திகை ஒழுங்கின்மைகளையும் - கால அவகாசமின்மையையும் - குறைந்தது ஒரு நிலைக் கண்ணாடியின் முன் பயிற்சி பெற்றிருக்க வேண்டிய முகபாவங்களையும் - ஒரு குழந்தையின் முகம் அழும்போது ரோஜாப் பூப்போன்றிருப்பதால் அதைச் சதா அழவைத்துப் பார்க்கின்ற மாலதி மைத்ரியின் கிங்கிரக் கவிதைகளையும் கடந்து உங்கள் நிகழ்த்திக் காட்டல் - பட்ட செடியின் கடைசி மலர்களாய் மகரந்தப் பரவலுக்காக - தும்பியை - தேனீயை - ஒரு வண்ணத்துப் பூச்சியை - வீசும்



குழந்தைகளிடம் பொய்களைக் கூறாதீர்கள்
இயக்கம் : அருந்ததி

## காதலும் — காமமுமே வன்முறை சார்ந்ததான தமிழ்ச் சமூகத்தில், யுத்தமும் மரணங்களும் இயல்பு வாழ்வாக வரித்துக் கொள்கின்ற இலகுத்தன்மை விதியாக இறுகிப்போய் உள்ளது.

தென்றலை அழைப்பதாய் உணர்கிறேன். ஏனெனில் வெற்று வரிகளாக்கப்பட்ட எண்ணற்றவைகளின் இழப்புக்கள் - வெறும் புள்ளிவிபரங்களாக்கப்பட்ட பெரு நிகழ்வுகள் - சரித்திரத்தை மாற்றிய மைக்கும் மறதிகள் - அதிகாரம் கூறும் மாயக் கதைகள் - என்கிற எல்லாப் பம்மாத்துக்களுக்கு மிடையில் சிக்கி உயிர்ச்செயல் மிதந்து தத்தளிக் கிறது - பிறந்த இட மீட்பும் - கடவுளின் இல்லங்களை மீட்பதுமான தினப்போர் தேசத்தின் புத்திர புத்திரிகளே! இவை மேற்குலகிலும் 10 நூற் றாண்டுகளுக்கு மேலாய் தொடர்ந்தவைதான்.

விஷ வாயுவில் இருந்தும் - சித்திரவதை முகாம் களில் இருந்தும் தப்பிய யூத இனம் பாலஸ்தீன் என்கிற தினக்கொலைப் பரப்பை உருவாக்கு கின்ற குரூர முரண் எமக்குப் பாடமாகிறது.

வேறுவேறு முறைகளில், வேறுவேறு கணிதத் தில் உடல்களைக் கொன்று குவித்துக் கொண்டி ருக்கும் துங்கமாமணித் தீவில் - எல்லோரையும் ஒரே தர்க்கத்துக்குக் கொண்டு வருகின்ற வன்முறையையும் மீறி வித்தியாசங்கள் - வேறுபாடுகள் - பன்மைகள் மட்டுமே வாழ்தலின் அர்த்தமும் நியதியும் என்பதை ஒப்புக் கொண்டு - குழந்தைகளை - குழந்தைமையை அவர்களிடமே ஒப்படைப்போம்.

நமது குழந்தைகள் எங்களைக் கேட்டுப் பிறக்கவில்லை.

அவர்கள் எங்களைக் கேட்டு சுவாசிக்க வில்லை.

அவர்கள் எங்களைக் கேட்டு உடம்பு பிரட்டவில்லை.

அவர்கள் எங்களைக் கேட்டு புவியீர்ப்பைச் சமன் செய்து எழுந்து நடக்கவில்லை.

அவர்களை அவர்களிடமே ஒப்படைத்து விடுவோம்.

மயானங்களைக் காவல் செய்யும் மயான அரசியலில் இருந்து வெளிவருவோம்.

என் இனிய குழந்தைகளே!

காலச் சுழற்சியின் அகழ்வில் - அதன் தூர்வில் உங்களை நான் குழந்தைகளாகவே நேசிக்கிறேன்.

மரணித்துப்போன என் இனிய குழந்தைகளே! உங்கள் புதைகுழிகளின் மீது நான் மண் தூவுகிறேன்.

*முதலாம் பிடி மண் தமிழுக்காக!*
*இரண்டாம் பிடி மண் மண்ணுக்காக!*
*மூன்றாம் பிடி மண் பிணத்துக்காக!*
*மனதில் எழுவதோ புரட்சியின் பாடல்!*

*மனதை எரிப்பதோ யுத்த யதார்த்தம்!*

பிரதியாக்கம்:
ராசன் றஜீன்குமார்
09.03.2006